## திருப்பூர், கோவையில் இன்று கள ஆய்வு!

# பெருந்தலைவர் காமராஜர், சி.சுப்பிரமணியம் சிலைகள்!

## பொள்ளாச்சியில் நாளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

சென்னை, ஜூலை 22 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜூலை 22, 23 ஆகிய இரு தேதிகளில் திருப்பூர் மாவட்டத்தில் கள ஆய்வில் ஈடுபட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் அமைக்கப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராசர் அவர்களின் சிலையை திறந்து வைக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.7.2025) காலை சென்னையில் இருந்து விமானம் மூலமாக புறப்பட்டு கோவை விமான நிலையம் செல்கிறார். அங்கிருந்து சாலை வழியாக திருப்பூர் செல்லும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் வேலம்பாளையத்தில் புதிதாக கட்டப்பட்டு உள்ள அரசு மருத்துவமனைக் கட்டிடத்தை திறந்து வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து கோவில் வழி புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருப்பூரில் பகல் ஓய்வுக்குப் பிறகு மாலையில் திருப்பூரில் இருந்து புறப்பட்டு மடத்துக்குளம் சென்று அங்கு அமைக்கப் பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்து வைக்கிறார்.

**'ரோட் ஷோ'**

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருப்பூர், உடுமலைப் பேட்டை, மடத்துக்குளம் ஆகிய இடங்களில் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடங்களில் நடைபெறும் 'ரோட் ஷோ' விலும் முதலமைச்சர் கலந்து கொள்கிறார்.



இன்று, 22-ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) இரவு உடுமலையில் தங்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 23-ஆம் தேதி காலையில் உடுமலை பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள பெரியார், அண்ணா, கலைஞர், அம்பேத்கர் சிலைகளை திறந்து வைக்கிறார்.

**புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!**

அதைத் தொடர்ந்து, நேதாஜி மைதானத்தில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அதன் பிறகு கோவை மாவட்டம் பொள்ளாச்சி செல்லும் முதலமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி வட்டம் பொதுப் பணித்துறை நீர்வள தலைமை பொறியாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள - பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் நடை பெறக் காரணமாகத் திகழ்ந்த பெருந்தலைவர் காமராசர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிர மணியம், வி.கே.பழனிசாமி கவுண்டர், மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை நாளை திறந்து வைத்து, விவசாய மக்கள் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக 1348 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தையும் திறந்து வைக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு நாளை (23-ஆம் தேதி) மாலை கோவை விமான நிலையத்தில் இருந்து விமானம் மூலமாக சென்னை திரும்புகிறார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 20.07.2025 அன்று திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தின் செயல்பாடுகளையும், பேருந்துகளின் இயக்கங்களையும், பயணிகள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உணவகங்கள் உள்ளிட்ட கடைகள் சிறப்பான முறையில் இயங்கி வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பயணியர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டம் திருச்சிராப்பள்ளி மண்டல பொதுமேலாளர் சதீஷ்குமார் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி, போக்குவரத்துத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஈரோடு கோட்டை பகுதியில், பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன் ஏற்பாட்டில் சலவை தொழிலாளர்களுக்கு இலவச சலவை பெட்டிகள், தூய்மை பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியன் மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், குறிஞ்சி என்.தண்டபாணி, வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், அக்னி டி.சந்திரசேகரன், மாமன்ற உறுப்பினர் ஜெயந்தி ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பல்கீஸ், சி.ஏ.கார்த்திகேயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்


